



விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் மண்டல பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ, தொகுதி பார்வையாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திண்டிவனத்தில் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ சிறப்புரை!

திண்டிவனம், செப் 24.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் செஞ்சி, மயிலம் ,திண்டிவனம் சட்டமன்ற தொகுதி 2026 சட்டமன்றத் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் திண்டி வனத்தில் நடைபெற்றது

விழுப்புரம் வடக்கு மாவட்ட அவை தலைவர் டாக்டர்.சேகர் தலைமை தாங்கினார்.

சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் மயிலம் புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி, செஞ்சி கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் மண்டல பொறுப்பாளரும், உழவர் மற்றும் வேளாண் துறைஅமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.

கூட்டத்தில் அமைச்சர் எம். ஆர். கே/பன்னீர்செல்வம் பேசுகையில் :

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று கடந்த நான்கு ஆண்டுகளில் ஏழை எளிய மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் .அந்த வகையில் தாயுமானவர் திட்டத்தை அறிவித்து வயதானவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு இல்லம் தேடி சென்று ரேஷன் பொருட்களை வழங்கி வருகின்றனர். உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காண வேண்டுமென முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அந்த பணிகளும் தற்போது நடைபெற்று வருகிறது. நலன் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் 17 வகையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது இந்த சிகிச்சை முகாமில் திமுக நிர்வாகிகள் சிகிச்சை முகாமுக்கு வருகை தரும் பொது மக்களுக்கு உறுதுணையாக பல்வேறு உதவிகள் செய்ய வேண்டும் மேலும் இன்னும் சில தினங்களில் வாக்காளர் பட்டியல் திருத்த முகம் நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது வாக்காளர் பெயர் பட்டியல் திருத்தம் பணியில் பி.எல்.ஏ.2 பி.எல்.சிறியர்வாகிகள் தீவிர கவனம் செலுத்தி பணியாற்ற வேண்டும். பேரூர் நகரப் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.திட்டமிட்டு கழக பணிகளை அனைத்து நிர்வாகிகளும் மேற்கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்மாசிலாமணி,சேதுநாதன், செந்தமிழ் செல்வன்,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,மாவட்டத் துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார்,நெடுஞ்செழியன், சின்னராஜ்,பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன்,கதிரேசன், சாந்தி ஏழுமலை, வீடூர் ரவி,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, சொக்கலிங்கம்,ராஜாராம், பச்சையப்பன், விஜயராகவன், சாந்தி சுப்பிரமணியன், துரை, இளம்வழுதி, மணிமாறன், செழியன், தயாளன், பழனி,ரவிச்சந்திரன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், செஞ்சி நகர செயலாளர் கார்த்திக்,அனந்தபுரம் நகர அவைத் தலைவர் டாக்டர் கல்யாண் குமார்,உள்ளிட்ட மாவட்ட அணி அமைப்பாளர்கள் திமுக நிர்வாகிகள் ,சட்டமன்றத் தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஒலக்கூர் ஒன்றியம் திண்டிவனம் கோவிந்தசாமி அரசு கல்லூரி வளாகத்தில்

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் செப். 24-

ஒலக்கூர் ஒன்றியம் திண்டிவனம் கோவிந்தசாமி அரசு கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் 2300க்கும் மேற்பட்டவர்களுக்கு 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் அ. கோவிந்தசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம் தலைமையில்துணைச் சேர்மன் ராஜாராமன் முன்னிலையில் நடைபெற்ற முகாமினை

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ .தொழிலாளர் நலத்துறை ஆணையரும், விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன் ஆகியோர் முகாமினை தொடங்கி வைத்துமகப்பேறு பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தினை வழங்கி சிறப்புரையாற்றி நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை ஆய்வு மேற்கொண்டனர்.

முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ், விழுப்புரம் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் டாக்டர்லதா ,மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் செந்தில்குமார்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி,திண்டிவனம் சார் ஆட்சியர் ஆகாஷ்,தமிழ்நாடுதூய்மை பணியாளர் வாரிய உறுப்பினர் விழுப்புரம் கண்ணன்,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல் ,மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மனநலம் ,பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இசிஜி உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியா கிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள்கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு முகாமில்மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த முகாமில் 2300 க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

### எழும்பூர் தொகுதி, மேம்பாட்டு நிதியின் கீழ் - வார்டு 61 -ல்

# ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன உடற்பயிற்சிக் கூடம்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

சென்னை, செப். 24 -

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.61, எழும்பூர், ரெங்காச்சாரி தெருவிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 41.00 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய, நவீன உடற்பயிற்சிக் கூடம் கட்டும் திட்டப் பணிக்கு நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்த மாநகராட்சி விளையாட்டுத் திடலில் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 66.00 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை புல் தரை கால்பந்தாட்ட விளையாட்டுக் களம் அமைக்கப்பட்டு, 23.05.2025 அன்று சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன் அவர்களால் பகுதி இளைஞர்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் ரெங்காச்சாரி மாநகராட்சி விளையாட்டுத் திடலில் நவீன உடற்பயிற்சிக் கூடத்தையும் அமைத்துத் தர வேண்டுமென சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைத்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்ற சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தனது தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கு 41.00 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அத்திட்டப் பணிக்கான அடிக்கல்லை நேற்று நாட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் கீழ் அமைந்துள்ள திராவிட மாடல் அரசு இளைஞர்களின் உடல் நலன் மற்றும் மன நலனைப் பேணும் வகையில் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வருவதைச் சான்று பகரும் வகையில் இவ்விரு திட்டப் பணிகளும் அமைந்திருப்பதாக சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் அடிக்கல் நாட்டு விழாவின்போது சுட்டிக் காட்டினார்.


இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருசோத்தமன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மு.கமலக் கண்ணன், மா.காந்தி; 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 108 ‘அ’ வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் விஜய போஸ், 58 ‘அ’ வட்டப் பகுதிப் பிரதிநிதி விஜயகுமார், 61வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் நித்திஷ் கிரிதரன், 108 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெயகுமார், சூர்யா; 58வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ரோஹித்குமார், 58 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜ்குமார், 77வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மகாதேவன், 78 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மகேஷ்குமார், எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், பாக முகவர் கவிதா, விஷால், ஜெ.சரவணன், சுந்தர்ராஜ், குணசேகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

# மெய்சிலிர்த்து நிற்கிறேன்!

## — முதல்வர் மு.க.ஸ்டாலின்!







தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மெய்சிலிர்த்து நிற்கிறேன்...**

**விழுப்புரம் மாவட்டம் சிறுவந்தாட்டைச் சேர்ந்த ஓவியர் டி.ஆர்.கோவிந்தராஜன் அவர்கள் எழுதிய கடிதமும் ஓவியப் புத்தகமும் நேற்று வந்தடைந்தது.**

**அவருக்கு வயது 87ஆம்!**

**அவரது எழுத்தில் வெளிப்படும் கழகப் பற்றைக் காணுங்கள்... தமிழ் மண்ணில் தமிழர்களின் உணர்வால் வேர்விட்டிருக்கும் நம் திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் நூறு ஆண்டுகளைக் கடந்தும் நிலைத்து நிற்கும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

# ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ விழா!

## ‘தினகரன்’ நாளேடு பாராட்டு!

சென்னை, செப். 24-

‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்று ‘தினகரன்’ நாளேடு நேற்றைய தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது குறித்து தினகரன் நாளேட்டின் நேற்றைய தலை யங்கம் வருமாறு:-



தினகரன்

செப்டம்பர் 23, 2025 செவ்வாய்க்கிழமை

**கல்வித்துறைக்கு மகுடம்**

தமிழ்நாடு எப்போதும் கல்வியில் சிறந்து விளங்கி வருகிறது. குறிப்பாக, உயர்கல்வியில் இந்தியாவில் முதலிடம் பிடித்து முத்திரை பதித்துள்ளது. கல்வி வளர்ச்சியில் மற்ற முதல்வர்களை காட்டிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆட்சி பொறுப்பேற்றது முதல் கல்விக்காக அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

கல்வித்துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் எல்லாம், "கல்விதான் உங்களிடமிருந்து யாராலும் திருடமுடியாத சொத்து" என்று அடிக்கடி சொல்லி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், அதற்கேற்றாற்போல் பள்ளி கல்வியிலும், உயர்கல்வியிலும் நிதி நெருக்கடி எத்தனை இருந்தாலும் பல்வேறு திட்டங்களையும், சலுகைகளையும் நிறைவேற்றி வருகிறார். அதிலும் உயர்கல்வியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி காலம், பொற்காலம் என்று சொல்லலாம்.

ஏனெனில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்-2 வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்து இடைநிற்றல் இன்றி உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண்' திட்டத்தை முதல்வர் அறிமுகப்படுத்தினார். இந்த திட்டத்தின் மூலம் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்க வழிவகை செய்கிறது. இதனை

தமிழ்நாடு எப்போதும் கல்வி யில் சிறந்துவிளங்கி வருகிறது. குறிப்பாக, உயர்கல்வியில் இந்தியாவில் முதலிடம் பிடித்து முத்திரை பதித்துள்ளது. கல்வி வளர்ச்சியில் மற்ற முதல்வர்களை காட்டிலும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஆட்சி பொறுப்பேற்றது முதல் கல்விக்காக அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

கல்வித்துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் எல்லாம், “கல்விதான் உங்களிடமிருந்து யாராலும் திருட முடியாத சொத்து” என்று அடிக்கடி சொல்லி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அதற்கேற்றாற்போல் பள்ளி கல்வியிலும், உயர்கல்வியிலும் நிதி நெருக்கடி எத்தனை இருந்தாலும் பல்வேறு திட்டங்களையும், சலுகைகளையும் நிறைவேற்றி வருகிறார். அதிலும் உயர்கல்வியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி காலம், பொற்காலம் என்று சொல்லலாம்.

ஏனெனில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்து இடைநிற்றல் இன்றி உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண்’ திட்டத்தை முதல்வர் அறிமுகப்படுத்தினார். இந்த திட்டத்தின் மூலம் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்க வழிவகை செய்கிறது. இதனை தொடர்ந்து மாணவர்களுக்கும் மாதம் ரூ.1,000 வழங்கும் ‘தமிழ் புதல்வன்’ திட்டமும் பெரிய வரவேற்பை பெற்றுள்ளது.

பள்ளி படிப்பை முடித்து மாணவர்கள் இடை நிற்றல் இல்லாமல் உயர்கல்வியில் சேர வேண்டும், அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்ற சீரிய நோக்கில் கொண்டு வந்து உயர்கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை கொண்டு வந்துள்ளார். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சீரிய திட்டமாக பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. அகில இந்திய உயர் கல்வி ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையின்படி, உயர் கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவீதம் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது. இது அகில இந்திய சராசரியைவிட 2 மடங்கு அதிகமாகும்.

வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும் என்ற அவ்வையார் பாடலுக்கு ஏற்ப, ஒரு குடும்பத்தில் ஒருவர் கல்வி பயின்று வேலையில் சேர்ந்தால் அந்த குடும்பமே உயர்ந்து விடும்.

இந்நிலையில் சென்னையில் வரும் 25ம் தேதி “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” விழா நடக்க உள்ளது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின், தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியும் கலந்து கொள்கிறார்கள் என அமுதா ஐ.ஏ.எஸ். நேற்று கூறியுள்ளார். மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் “நான் முதல்வன்” திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும், இதில் தொழில் முறை வழிகாட்டுதல், வேலை வாய்ப்பு பயிற்சி, திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை இடம் பெறுகின்றன. பள்ளி மாணவர்களுக்கு ஊட்டச் சத்து நிறைந்த உணவு வழங்கும் திட்டம், அரசு பள்ளிகளில் இலவச கையடக்க கணினி, சைக்கிள், புத்தகங்கள், காலணிகள் மற்றும் மாணவர்களின் உயர் கல்வி உதவித்திட்டங்களை பட்டியலிட்டார். தமிழக அரசின் கல்வி திட்டங்கள் நகர்ப்புற மாணவர்களுக்கே அல்லாமல் கிராமப்புற மாணவர்களுக்கும் சமமாக சென்றடைய வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற் கொள்ளப்படுகிறது.

மாணவர் நலனை கருத்தில் கொண்டு தமிழக அரசு பல்வேறு புதிய முயற்சிகளை எடுத்து வருவதால், கல்வியில் முன்னேற்றம் அடைந்த மாநிலமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவதே இந்த விழாவின் முக்கிய நோக்கமாகவும், கல்வித்துறைக்கு மணிமகுடமாகவும் அமையும் என்பதில் மாற்று கருத்துக்கு இட மில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் நீலகிரி மாவட்ட தி.மு.க.விற்கான "அண்ணா அறிவாகம்" எனும், WAR ROOMஐ கழக துணை பொதுச்செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜ், தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் திறந்து வைத்தார்.